**செ.வெ.எண்:23** **நாள்:10.04.2025**

## <u>பத்திரிக்கை செய்தி</u>

கரூர் மாவட்டத்தில் பள்ளிகளில் செயல்படும் சத்துணவு மையங்களில் காலியாக உள்ள **<u>206 சமையல் உதவியாளர்</u>** பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்படவுள்ளன. வட்டாரம் வாரியாக நேரடி நியமனம் செய்யப்படவுள்ள சமையல் உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை அந்தந்த வட்டார அலுவலகங்களில் இனசுழற்சி வாரியாக தகவல் பலகையில் ஒட்டப்பட்டும்.

மாதிரி விண்ணப்ப படிவங்கள் கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவகம், அனைத்து வட்டாரங்கள் மற்றும் மாநகராட்சி அலுவலகத்தில் தகவல் பலகையில் ஒட்டப்படும்.

சத்துணவு மையங்களில் காலியாகவுள்ள சமையல் உதவியாளர் பணியிடம் தொகுப்பூதிய அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும், அவ்வாறு பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்களுக்கு ஒராண்டு கால பணிக்குப் பின்பு சிறப்பு காலமுறை ஊதியத்தில் (ஊதிய நிலை 1 Level of Pay –ரூ.3000 – 9000) ஊதியம் வழங்கப்படும்.

**இப்பணிக்கு 21 வயது முதல் 40 வயதுடைய பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். வயது நிர்ணயம் அறிவிப்பு தேதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும்.**

<u>வயது வரம்பு</u>

1. 21 முதல் 40 வரை ( பொது மற்றும் தாழ்த்தப்பட்டோர்)
2. 18 முதல் 40 வரை ( (பழங்குடியினர்)
3. 20 முதல் 40 வரை ( விதவை, கணவரால் கைவிடப்பட்டவர்)

குறைந்தப்பட்ச கல்வித் தகுதி 10 ஆம் வகுப்பு தோல்வி / தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழில் சரளமாக பேசத் தெரிந்திருக்கவேண்டும். நியமனம் கோரும் மையத்திற்கும் விண்ணப்பதாரரின் குடியிருப்புக்கும் இடைப்பட்ட துரம் 3 கி.மீ. –க்குள் இருக்க வேண்டும் ( ஊராட்சி – குக்கிராமம் – வருவாய் கிராமம் போன்றவைகள் கணக்கில் எடுத்துக்கொள்ள தேவையில்லை).

**<u>மாற்றுத் திறனாளிகள் ஒதுக்கீட்டில் 4 சதவீதம் இட ஒதுக்கீடு கீழ்கண்ட குறைபாடு உள்ளவர்கள் மட்டும் ( உரிய அடையாள அட்டையுடன்) விண்ணப்பிக்க வேண்டும்.</u>**

1. குறைவான பார்வை திறன் (மூக்குக்கண்ணாடி மூலம் பார்வை சரிசெய்யப்பட்டது)
2. காதுகேளாதோர் (கருவி பொறுத்தப்பட்டவர்)
3. உடல் இயக்க குறைபாடு (ஒரு கால்)
4. குணப்படுத்தப்பட்ட தொழு நோய்(40 சதவீதம் கைகளின் முழு செயல்பாட்டு திறன் உணர்திறன் மற்றும் செயல் திறன் உள்ளடக்கியது)
5. திரவ வீச்சினால் பாதிக்கப்பட்டவர்
6. குறிப்பிட்ட கற்றல் திறன் குறைபாடு (மிதமான)

விதவைகள், கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு 25 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்கள் https://karur.nic.in/ இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் மாநகராட்சி அலுவலகத்தில் நேரில் சமர்ப்பிக்கவும். அனைத்து அலுவலக வேலை நாட்களிலும், சனிக்கிழமைகளில் (19.04.2025 மற்றும் 26.04.2025 ) மட்டும் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

**விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்.26.04.2025 மாலை 5.45 மணி வரை மட்டுமே.**

அதன் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்று கொள்ளபட மாட்டாது . விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்களின் நகல்கள்

1. பள்ளி மாற்றுச் சான்றிதழ்,
2. SSLC மதிப்பெண் சான்றிதழ்,
3. குடும்ப அட்டை,
4. இருப்பிட சான்று,
5. ஆதார் அட்டை,
6. சாதிச்சான்று
7. விதவை, கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் ஆதரவற்ற பெண்கள் சான்றிதழ்
8. மாற்றுத் திறனாளிகள் – அதற்கான சான்றிதழ்

போன்றவற்றின் நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். அஞ்சல்துறையின் மூலம் காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படும் போது ஏற்படும் காலதாமதங்களுக்கு துறை பொறுப்பேற்காது. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகக் தேர்வின்போது அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும்.

வேறு அலுவலகங்களிலோ மற்ற அலுவலர்களிடமோ அளிக்கப்படும் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. உரிய சான்றிதழ்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

காரணம் ஏதும் குறிப்பிடாமல் நியமன அறிவிப்பு அறிக்கையினை இரத்து செய்வதற்கும் திரும்ப பெறுவதற்கும் திருத்துவதற்கும் கெடு தேதியினை நீட்டிப்பதற்கும் மாவட்ட ஆட்சியருக்கு உரிமை உண்டு. என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மீ.தங்கவேல்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கரூர் மாவட்டம்.**